சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590


## ஆணை நாள். 06.07.2026

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**1.வழக்கு எண்.CP 408/D/2024**
**2.வழக்கு எண்.CP 407/D/2024**

திரு சி.பிரபாகரன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு,
சென்னை - 600 107. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 18.12.2023<br>21.12.2023 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | ---- |
| பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவின் நாள் | 24.01.2024 |

******

## ஆணை

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு சி.பிரபாகரன் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி M.சசிகலா, உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு, சென்னை - 600 107 அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

**1.வழக்கு எண்.CP 408/D/2024**

மனுதாரர் 18.12.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், படிக்காசுவைத்தான்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு அமைப்பதற்கான தமிழ்நாடு அரசு அரசாணையின் ஒளிநகல் தொடர்பான 4 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு, சென்னை - 600 107அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

**2.வழக்கு எண்.CP 407/D/2024**

மனுதாரர் 21.12.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசாணை எண்.375, நாள்.21.05.1993 ன் சான்றிட்ட ஒளிநகல் தொடர்பான தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு, சென்னை - 600 107அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 18(1)ன் கீழான 24.01.2024 தேதியிட்ட புகார் மனுக்களை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அப்புகார் மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை 09.01.2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இப்புகார் மனுக்களை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**1.வழக்கு எண்.CP 408/D/2024**

**2.வழக்கு எண்.CP 407/D/2024**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
சி.எம்.டி.ஏ வளாகம், கோயம்பேடு,
சென்னை - 600 107.

**<u>மனுதாரர்</u>**
திரு சி.பிரபாகரன்,
க.எண்.L-25, தமிழ்நாடு வீட்டு வசதி
வாரிய குடியிருப்பு,
வன்னியம்பட்டி விலக்கு,
படிக்காசுவைத்தான்பட்டி கிராமம்,
இனாம்கரிசல்குளம் அஞ்சல்,
திருவில்லிபுத்தூர்,
விருதுநகர் மாவட்டம் - 626 125.

***Copy to: File***
***VP / PA***

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005